Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, AUGUST 14 2025

வியாழக்கிழமை 14, ஓகஸ்ட் 2025 | ஒளி: 11 கதிர் 028 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



## “சுமைகளை ஏற்று சேவைகளை வழங்க திட்டங்களை தயாரிக்கவும்”

கிராமிய வீதிகளில் பஸ்களை இயக்குவது இலாபகரமானதாக இல்லாவிட்டாலும் அந்த சுமையை அரசாங்கம் ஏற்று மக்களுக்கு அதிகூடிய சேவையை வழங்குவதற்கான திட்டங்களை தயாரிக்குமாறும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு தொடர்பான 2026 வரவு -செலவுத் திட்ட பூர்வாங்க கலந்துரையாடல் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற போதே மேற்கண்டவாறு பணிப்புரை விடுத்தார்.

தொடர்ச்சி P2



## “இலங்கையில் AI புரட்சியை ஏற்படுத்த ஒன்றுபடுவோம்”

இலங்கையர்களான நாம் பார்த்துக் கொண்டிருக்காது செயற்கை நுண்ணறிவை (AI) எமது சேவைகளில் ஈடுபடுத்திக்கொள்ள முன்வர வேண்டும் என டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்தார்.

டிஜிட்டல் பொருளாதார அமைச்சுடன் இணைந்து ஸ்ரீலங்கா மொபிட்டெல் மற்றும் இலங்கை தகவல் தொடர்பு தொழில்நுட்ப நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள தேசிய AI கண்காட்சி மற்றும் மாநாடு -2025 (National AI Expo & Conference -2025) எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 29 மற்றும் 30ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

தொடர்ச்சி P2

## கைதிக்கு சிகிச்சையளிக்க இலஞ்சம் வாங்கியவர் கைது

2024ஆம் ஆண்டு இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் தேசிய மனநல நிறுவனத்தின் (NIMH) பதில் பிரதி ஆணையாளர் டாக்டர் நயனஜித் ஹேமந்த ரணசிங்கவை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC) புதன்கிழமை (13) கைது செய்தது. முன்னர் சிறைச்சாலை சுகாதார சேவைகள் பதில் பிரதி ஆணையாளராக பணியாற்றிய டாக்டர் ரணசிங்க, வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவமனையில் கைதி ஒருவருக்குத் தொடர்ந்து சிகிச்சை அளிக்க ரூ.1.5 மில்லியன் கோரியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அந்த கைதி நோய்வாய்ப்பட்டு உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்தார்.

தொடர்ச்சி P2



# இலங்கையில் நீதிக்குப் புறம்பான கொலைகள்

■ அமெரிக்கா குற்றச்சாட்டு

அரசு காவலில் உள்ள தனிநபர்களின் கொலைகள், காவலில் உள்ள சந்தேக நபர்களின் கொலை, பத்திரிகையாளர்களைத் துன்புறுத்துதல் மற்றும் கருத்துச் சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகள் குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது என்று தெரிவித்துள்ளது.

ஜனவரி மற்றும் ஒகஸ்ட் மாதங்களுக்கு இடையில் மனித உரிமைகள் ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட ஏழு காவல் மரணங்களையும் அறிக்கை குறிப்பிடுகிறது.

‘போராட்டத்திற்கு’ப் பிறகு 2022 தேர்தல்களில் மகத்தான வெற்றியில் ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம், மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராக ‘குறைந்தபட்ச நடவடிக்கை’ மட்டுமே எடுத்துள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெறுவதற்கான சித்திரவதை குற்றச்சாட்டுகள் மற்றும் கைதுகள், வடக்கு மற்றும் கிழக்கில் தமிழ் ஊடகவியலாளர்களை துன்புறுத்துதல் மட்டுமல்லாமல், தொழிலாளர் உரிமைகள் மற்றும் பிற பிரச்சினைகள், பெண்களை கட்டாயமாகக் கருத்தடை செய்தல், போர்க்கால காணாமல் போனவர்கள் பற்றிய விசாரணையில் மெதுவான முன்னேற்றம் மற்றும் மனித புதைகுழிகள் ஆகியவையும் இந்த அறிக்கையில் அடங்குகின்றன.

போராட்டங்களை அடக்குவதற்கு இணைய பாதுகாப்புச் சட்டம் பயன்படுத்தப்படலாம் என்ற கவலையையும் அமெரிக்க வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

மனித உரிமை மீறல்கள் குறித்து அமெரிக்கா வெளியிட்டுள்ள இந்த அறிக்கையில் இலங்கையைப் பற்றி மட்டுமல்ல, பல நாடுகளைப் பற்றிய தகவல்களும் உள்ளன.




## “வடக்கு, கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று”

■ கனகராசா சரவணன், பேரின்பராஜா சபேஷ், எம்.எஸ்.எம்.நூர்தீன்

பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஆனந்த விஜயபாலவின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான விஜயத்தை புதன்கிழமை (13) அன்று மேற்கொண்டிருந்த நிலையில், மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றலில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

செம்மணி புதைகுழி , முல்லைத்தீவு மற்றும் சட்டவிரோத சமூக செயற்பாடுகளுக்கு நீதி கோரும் அகிம்சை வழி ஆர்ப்பாட்டமாக இது இடம்பெற்றது.

தொடர்ச்சி P2

## 6 வயது சிறுமி கடலுக்கு பலி

தங்காலையில் உள்ள மடிலா கடற்கரையில் நடந்து சென்று கொண்டிருந்த ஆறு வயது சிறுமி பலத்த அலைகளில் அடித்துச் செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தங்காலை காவல்துறையினரின் கூற்றுப்படி, தங்காலையைச் சேர்ந்த குழந்தையின் குடும்பத்தினர் சுற்றுலா சென்று உள்ளூர் விருந்தினர் மாளிகையில் தங்கியிருந்தனர். புதன்கிழமை (13) அன்று கடற்கரையில் நடந்து சென்று கொண்டிருந்தபோது இந்த சோகம் நிகழ்ந்தது.

கொழும்பில் உள்ள ஒரு முன்னணி பெண்கள் பாடசாலையின் மாணவியே இவ்வாறு கடலுக்குப் பலியாகியுள்ளார்.

## யாழ்ப்பாணத்தில் ‘Clean Sri Lanka’



வளமான நாடு - அழகான வாழ்க்கையை பெற்றுக் கொடுக்கும் நோக்கமாகக் கொண்டு அரசாங்கத்தால் முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்படும் ‘Clean Sri Lanka’ என்ற எண்ணக் கருவை வட மாகாணத்தில் ஊக்குவிக்கும் யாழ்ப்பாண மாவட்ட திட்டம் நல்லூர் கந்தசாமி ஆலய வருடாந்த மகோற்சவத்துடன் இணைந்ததாக புதன்கிழமை(13) அன்று ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## 37ஆவது பொலிஸ்மா அதிபராக பிரியந்த வீரசூரிய நியமனம்



மூத்த துணைப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவை புதிய பொலிஸ்மா அதிபராக (IGP) ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க நியமித்துள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதம், ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் டாக்டர் நந்திக சனத் குமநாயக்கவினால் பிரியந்த வீரசூரியவிடம் புதன்கிழமை (13) பிற்பகல் வழங்கப்பட்டது.

இலங்கை ஜனநாயக சோசலிசக்குடியரசின் அரசியலமைப்பின் 61 E (b) பிரிவின்படி, அரசியலமைப்பு சபையின் ஒப்புதலுடன் இந்தநியமனம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, 37ஆவது பொலிஸ்மா அதிபராக சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய நியமிக்கப்பட்டார்.

தொடர்ச்சி P2

## பொலிஸ்மா அதிபரிடம் நேரடியாக பேச வாட்ஸ்அப் எண்





பொலிஸ்மா அதிபரிடம் பொதுமக்கள் நேரடியாகப் பிரச்சினைகளைத் தெரிவிப்பதற்காக பொலிஸ் தரப்பில் புதிய வாட்ஸ்அப் எண்ணை அறிமுகப்படுத்தியுள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் இலங்கை பொலிஸார் அர்ப்பணிப்புடன் தனது கடமைகளை செய்து வருகின்ற நிலையிலேயே பொஸில் தரப்பில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 071-8598888 என்ற புதிய வாட்ஸ்அப் எண் புதன்கிழமை (13) முதல் செயல்பாட்டுக்கு வந்துள்ளது. இந்த எண்ணை ஐஜிபிக்கு நேரடியாக குறுஞ்செய்தி அனுப்பவும், வீடியோக்கள் மற்றும் புகைப்படங்களை அனுப்பவும் மட்டுமே பயன்படுத்த முடியும் என்றும் அழைப்புகளைப் பெற முடியாது என்றும் காவல்துறை தெரிவிக்கிறது.

பொலிஸ் அதிகாரிகளும் இந்த எண்ணின் மூலம் தங்கள் பிரச்சினைகள் மற்றும் தகவல்களைப் பற்றித் தெரிவிக்க முடியும்.



## தென் கொரிய முன்னாள் ஜனாதிபதியின் மனைவியும் கைது

தென்கொரியாவின் முன்னாள் தலைமகள் கிம் கியோன் ஹீ (Kim Keon Hee) ஊழல் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவருடைய கணவரும் முன்னாள் ஜனாதிபதியுமான யூன் சுக் இயோல் (Yoon Suk Yeol) தடுத்துவைக்கப்பட்ட பிறகு அந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒரே சமயத்தில் சிறையில் வைக்கப்பட்டுள்ள முதல் ஜனாதிபதி தம்பதி அவர்கள். பங்குகளின் மதிப்பை உயர்த்தும் மோசடியில் ஈடுபட்டது, தேர்தல் தலையீடு, லஞ்சம் கொடுத்தது உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் திருவாட்டி கிம் மீது சுமத்தப்பட்டுள்ளன. தென் கொரியக் கட்டுமான நிறுவனம் வழங்கிய 43,000 டாலர் மதிப்புள்ள பதக்கம் குறித்து அவர் தகவல் தெரிவிக்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

திரு யூனும, திருவாட்டி கிம்மும் வெவ்வேறு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

PAGE 1 தொடர்ச்சிகள்

# “சுமைகளை ஏற்று சேவைகளை வழங்க திட்டங்களை தயாரிக்கவும்”

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சுக்கான 2025ஆம் ஆண்டு வரவு -செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் குறித்த மீளாய்வு மற்றும் 2026ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்ட முன்மொழிவுகள் குறித்த பூர்வாங்க கலந்துரையாடல் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் புதன்கிழமை (13) பிற்பகல் இடம்பெற்றது.

இங்கு, போக்குவரத்துத் துறை தொடர்பில் தனித்தனியாக, நெடுஞ்சாலைகள், அதிவேக நெடுஞ்சாலைகள், கிராமிய வீதிகள் ஆகியவை குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், துறைமுகங்கள் மற்றும் அதன் செயற்பாடுகளுக்கு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள், அந்த ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்ட விதம் மற்றும் எதிர்கால திட்டங்கள் குறித்தும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இங்கு கேட்டறிந்தார்.

எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தைத் திட்டமிடும்போது, நாட்டை தற்போதைய நிலையிலிருந்து மீட்டெடுப்பதற்கு முக்கியமான துறைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்தினார். அதன்படி, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் ஆகிய துறைகளை நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் வகையிலான திட்டங்களில் அதிக கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

# “இலங்கையில் AI புரட்சியை ஏற்படுத்த ஒன்றுபடுவோம்”

இது தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு அறிவிக்கும் மாநாடு ஒன்று இலங்கை தகவல் தொடர்பு தொழில்நுட்ப நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை (12) அன்று இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன கூறியுள்ளதாவது,

இலங்கையை பொறுத்தவரையில், செயற்கை நுண்ணறிவு (AI) என்பது மிகவும் அவசியமானது. செயற்கை நுண்ணறிவு எமது கையடக்கத் தொலைபேசிகளில், இணைத்தளங்களில் மட்டுமல்ல, எமது அன்றாட வாழ்க்கையிலும் ஒரு பகுதியாக மாறியுள்ளது. உலகளாவிய ரீதியில் செயற்கை நுண்ணறிவு (AI) தொழிற்துறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதுடன் பொருளாதாரங்களையும் வலுப்படுத்தி வருகின்றது.

**பாடசாலைகளில் செயற்கை நுண்ணறிவு (AI) தொடர்பில் கற்பிக்கவுள்ளோம். தற்போது கடமைகளில் ஈடுபடுவோருக்கு பல்வேறு செயற்கை நுண்ணறிவு (AI) குறித்த சந்தர்ப்பங்களை உருவாக்கவுள்ளோம். இதனால் எமது தொழிற்துறைகளும் பொருளாதாரமும் வலுப்பெறுவதுடன், உறுதியடையும். அத்துடன் எமது இளைஞர்களுக்கும் எதிர்காலத்தில் உலகளாவிய ரீதியில் பல சந்தர்ப்பங்கள் உருவாகும்**

இந்த செயற்கை நுண்ணறிவு (AI) பயன்பாட்டில், இலங்கை பின்னடைவில் ஒள்ளது. இந்தியாவில் 57 % வீதமான அரச சேவைகளும் சிங்கப்பூரில் 90 வீதமான அரச சேவைகளும் செயற்கை நுண்ணறிவை (AI) ஈடுபடுத்துகின்றன. அத்துடன், வியட்நாமும் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துவதில் அதிக ஆர்வம் காட்டிவருகின்து.

இந்த நிலையில், இலங்கையர்களான நாம் பார்த்துக் கொண்டிருக்காது செயற்கை நுண்ணறிவை (AI) எமது சேவைகளில் ஈடுபடுத்திக்கொள்ள முன்வர வேண்டும்.

எதிர்வரும் செம்டெம்பர் மாதம் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள தேசிய AI கண்காட்சி மற்றும் மாநாடு -2025 ( National AI Expo & Conference -2025 ) என்பது எமது நாட்டுக்கு ஒரு பாரிய பற்களிப்ளை ஏற்படுத்தவுள்ளது.

இந்த கண்காட்சியில் உலகளாவிய செயற்கை நுண்ணறிவு (AI) வல்லுநர்கள், தொழிற்றுறையினர், கல்விமான்கள், கண்டுபிடிப்பாளர்கள், கலந்துகொள்ள உள்ளனர்.

ஒவ்வொரு இலங்கையருக்கும் அதாவது, விவசாயி முதல் கொழும்பிலுள்ள தொழில் முயற்சியாளர் வரை செயற்கை நுண்ணறிவு (AI) பயன்படும்.

செயற்கை நுண்ணறிவு (AI) வியடயத்தில் அரசாங்கம் ஏற்கெனவே முன்னோக்கிச் செல்கின்றது.

நாம் தேசிய செயற்கை நுண்ணறிவு (AI) மூலோபயத்திட்டத்தை வெளியிட்டுள்ளோம்.

அது தற்போது மக்களின் கருத்துக்களுக்காக வெளியிடப்பட்டுள்ளது. நெறிமுறை, நிலைபேண்தகு செயற்பாடு போற்றவற்றை செயற்கை நுண்ணறிவு ( AI ) உள்ளடக்கியுள்ளதை நாங்கள் உறுதி செய்கின்றோம்.

நாட்டில் விவசாயம், சுகாதாரத்துறை, கல்வி மற்றும் போக்குவரத்துத் துறையில் செயற்கை நுண்ணறிவை (AI) விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளோம். செயற்கை நுண்ணறிவு (AI) தொடர்பில் மக்களுக்கு தேவையான அறிவுகளை வழங்கவுள்ளோம்.

அதாவது, பாடசாலைகளில் செயற்கை நுண்ணறிவு (AI) தொடர்பில் கற்பிக்கவுள்ளோம். தற்போது கடமைகளில் ஈடுபடுவோருக்கு பல்வேறு செயற்கை நுண்ணறிவு (AI) குறித்த சந்தர்ப்பங்களை உருவாக்கவுள்ளோம்.

இதனால் எமது தொழிற்துறைகளும் பொருளாதாரமும் வலுப்பெறுவதுடன், உறுதியடையும். அத்துடன் எமது இளைஞர்களுக்கும் எதிர்காலத்தில் உலகளாவிய ரீதியில் பல சந்தர்ப்பங்கள் உருவாகும். செயற்கை நுண்ணறிவில் (AI) புரட்சியை ஏற்படுத்த நாம் அனைவரும் ஒன்றுபடுவோம் என்றார்.

இந் நிகல்வில் , இலங்கை தொலைத்தொடர்பு (SLT) தலைவர் டாக்டர் மோதிலால் டி சில்வா மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.




# “வடக்கு, கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று”

“வடக்கு, கிழக்கில் இருந்து இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும்”, “பொதுமக்களுக்கு சொந்தமான காணிகள் பொதுக் கட்டிடங்கள் விடுவிக்கப்பட வேண்டும்”, “செம்மணி புதைகுழி தொடர்பான நீதியான விசாரணை வேண்டும்”, “முல்லைத்தீவு கபில்ராஜ் என்ற இளைஞனுக்கு நீதி வேண்டும்” போன்ற கோரிக்கைகளை முன்வைத்து கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், ஞா.சிறிநேசன், வைத்தியர் இ.சிறிநாத், மட்டக்களப்பு மாநகர சபை மேயர் சிவம் பாக்கியநாதன், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் சிவில் செயற்பாட்டாளர்கள், கட்சி உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# இராவணனின் விமானங்களை மீட்கும் செய்திக்கு மறுப்பு

“இராவணனுடன் தொடர்புடைய 19 விமானங்களை மீட்கத் திட்டமிட்டுள்ளதாக" ஊடகங்களில் வெளியான செய்திகளை இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து ஆணைக்குழு (CAASL), மறுத்துள்ளது, மேலும் அந்தக் கதை "முற்றிலும் தவறானது மற்றும் ஆதாரமற்றது" என்று கூறியுள்ளது.

அத்தகைய கூற்றை முன்வைக்கவில்லை அல்லது அது தொடர்பான எந்தவொரு திட்டத்திலும் ஈடுபடவில்லை என்று ஆணைக்குழு கூறியுள்ளது.

தேசிய சட்டங்கள் மற்றும் சிக்காகோ மாநாட்டின்படி, பாதுகாப்பு, மற்றும் நிலையான வளர்ச்சியில் கவனம் செலுத்தி, சிவில் விமானப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதும் மேற்பார்வையிடுவதும் தனது பங்கு என்று CAASL வலியுறுத்தியது.

விமானப் போக்குவரத்துத் திணைக்களத்தின் நம்பகத்தன்மைக்குத் தீங்கு விளைவிக்கும் தவறான தகவல்களைப் பரப்புவதைத் தவிர்ப்பதற்காக, வெளியிடுவதற்கு முன்பு CAASL உடன் தகவல்களைச் சரிபார்க்குமாறு பொதுமக்களும் ஊடகங்களும் வலியுறுத்தப்பட்டனர்.

இராவணனால் 25 இடங்களில் மறைத்து வைக்கப்பட்டதாகக் கூறப்படும் 19 விமானங்களை மீட்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் ஆராய்ச்சி பிரிவு தயாராகுகிறது என ஏற்கெனவே செய்தி வெளியானது.

இந்த விமானங்கள் இராவணனால் தயாரிக்கப்பட்டதாகவும், பாதரசம் மற்றும் வேறு இரசாயனங்களைப் பயன்படுத்தி பறந்ததாகவும் ஆராய்ச்சிகள் வெளிப்படுத்தியுள்ளன என்றும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது..

குருநாகல், வாரியப்பொல, சிகிரியா, தம்புள்ள, மஹியங்கன்னை, பதுளை, ஹம்பாந்தோட்டை உள்ளடங்கலாகக் குகைகளிலும் மலைப்பாங்கான பகுதிகளில் நிலக்கீழும் விமானங்கள் ஒழிக்கப்பட்டுள்ளதாக இருப்பதாகவும், இது தவிர ராவணனின் விமானத்தை இயக்குவதற்கான நபரொருவரும் காணப்பட்டதாக ஆராய்ச்சிகள் வெளிக்காட்டியுள்ளன என்றும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தன. இந்த செய்தியையே இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து ஆணைக்குழு மறுத்துள்ளது.



# யாழ்ப்பாணத்தில் ‘Clean Sri Lanka’



‘மனப்பூர்வமாக யாழ்ப்பாணத்திற்கு - Clean Voyage of Unity’ என்ற தொனிப்பொருளின் கீழ் புதன்கிழமை (13) முதல் ஆகஸ்ட் 20 வரை நடைபெறும் நிகழ்ச்சித் திட்டத்தின் கவர்ச்சிகரமான பிரவேசமாக, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரை பயணத்தைத் தொடங்கிய யாழ்தேவி ரயில் பயணத்தின் போது ஊக்குவிப்புத் திட்டமொன்று புதன்கிழமை (13) காலை 6.40 மணிக்கு செயல்படுத்தப்பட்டது.

அதன் ஆரம்ப நிகழ்வு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் நடைபெற்றது. ஜனாதிபதியின் சிரேஸ்ட மேலதிகச் செயலாளர் ரஸ்ஸல் அபொன்சுவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்.

‘Clean Sri Lanka’ என்ற எண்ணக்கரு தொடர்பாக ரயிலில் பயணிக்கும் பயணிகளை தெளிவுபடுத்தல், பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பது மற்றும் அது தொடர்பில் மனப்பான்மையை உருவாக்குவது மற்றும் ஒழுக்க விழுமியங்களை மேம்படுத்துவது இதன் நோக்கங்களாகும்.

இலங்கையின் பொதுவான பாரம்பரியமாகக் கருதப்படும் ரயில் போக்குவரத்து குறித்து சமூகத்தில் சாதகமான மனப்பான்மையை உருவாக்குவதற்கும், அவசர நிலைமைகளில் முதலுதவி வழங்குவது எப்படி என்பது குறித்து தெளிவுபடுத்தவும் நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

சிங்கள மற்றும் தமிழ் கலைஞர்களை உள்ளடக்கிய இசை நிகழ்ச்சியும் இதன் போது இடம்பெற்றது.

பெயார் பெர்ஸ்ட் காப்புறுதி நிறுவனம், சிங்ஹகிரி தனியார் நிறுவனம், செம்சன் றப்பர் தொழிற்துறை நிறுவனம் மற்றும் இலங்கை செஞ்சிலுவை சங்கம் ஆகியவற்றின் ஆதரவுடன் Clean Sri Lanka செயலகம் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளது.

# 37ஆவது பொலிஸ்மா அதிபராக பிரியந்த வீரசூரிய நியமனம்

உயர் பதவியை ஏற்பதற்கு முன்பு, பொலிஸ் கான்ஸ்டபிள், துணைப் பொலிஸ்மா அதிபர் மற்றும் உதவிப் பொலிஸ்மா அதிபர் ஆகிய மூன்று முக்கிய பதவிகளிலும் முன்னேறிய முதல் பொலிஸ்மா அதிபர் இவர் ஆவார்.

அவர், ஒகஸ்ட் 14ஆம் திகதியன்று தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொள்வார் என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

# கைதிக்கு சிகிச்சையளிக்க இலஞ்சம் வாங்கியவர் கைது

கோரிய இலஞ்சத்தில் ரூ.300,000 வழங்கப்பட்டதாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

பிட்டகோட்டேயில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து புதன்கிழமை (13) காலை கைது செய்யப்பட்ட டாக்டர் ஹேமந்த ரணசிங்கவை ஆகஸ்ட் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு மேலதிக நீதவான் மஞ்சுள ரத்நாயக்க புதன்கிழமை (13) உத்தரவிட்டார்.

## காதலனை கரம்பிடிக்க
# கடல் தாண்டிய காதலி

காதலனை கரம் பிடிப்பதற்காக இலங்கையைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் படகில் கடல் தாண்டி தனுஷ்கோடி சென்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது. விசாரணைகளின் பின்னர் அவர் மண்டபம் முகாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

ராமேஸ்வரம் அருகே தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரைக்கு செவ்வாய்க்கிழமை அன்று அதிகாலை இளம்பெண் ஒருவர் வந்திருப்பதாகக் கடலோர பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய குறித்த இடத்திற்குச் சென்ற பொலிஸார், அந்தப் பெண்ணை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கை மன்னார் ஆண்ட குளம் பகுதியைச் சேர்ந்த விதுர்ஷியா என்ற குறித்த பெண் ஏற்கனவே தனது தாய், தந்தையுடன் திண்டுக்கல் மாவட்டம் பழனியில் உள்ள மறு வாழ்வு முகாமில் வசித்துள்ளதுடன் அப்போது அவர், ஒரு வாலிபரை காதலித்துள்ளார்.

இந்நிலையில், கடந்த ஏப்ரல் மாதம் விமானத்தில் இலங்கைக்கு வந்துள்ளதுடன் இங்கிருந்து திரும்பி இந்தியா செல்ல அவருக்கு விசா கிடைக்காததால் காதலனை கரம்பிடிக்க படகில் தமிழகம் செல்ல முடிவெடுத்துள்ளார். இதற்காக அப்பெண் தனது நகையை விற்று 2 லட்சம் ரூபாய் பணத்தைத் திரட்டி படகோட்டியிடம் கொடுத்து, அவரது ஏற்பாட்டில் தலைமன்னார் கடற்கரையில் இருந்து பிளாஸ்டிக் படகில் ஏறி அரிச்சல்முனைக்கு சென்றுள்ளார்.

அந்த பெண்ணை இறக்கி விட்டு படகோட்டி மீண்டும் இலங்கையை நோக்கித் தப்பிச் சென்றதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. விசாரணைக்குப் பின்னர் அந்த பெண் மண்டபம் முகாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். காதலனை கரம்பிடிக்க இலங்கையிலிருந்து படகில் இளம்பெண் ஒருவர் கடல் கடந்து வந்தது அப்பகுதியில் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

# மட்டக்களப்பில் கவனயீர்ப்பு...

பேரின்பராஜா சபேஷ், எம்.எஸ்.எம்.நூர்தீன், கனகராசா சரவணன்

பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஆனந்த விஜயபாலவின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான விஜயத்தை முன்னிட்டு மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றலில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று புதன்கிழமை (13) அன்று முன்னெடுக்கப்பட்டது.















# ஒரே நாளில் 618 பேர் கைது

நாட்டில் குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் தொடர்பான நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 618 நபர்களை இலங்கை பொலிஸ் கைது செய்துள்ளது.

இலங்கையில் குற்றச்செயல்கள் மற்றும் போதைப்பொருள் தொடர்பான நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக செவ்வாய்க்கிழமை (12) நடத்தப்பட்ட பொலிஸ் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக 24,708 பேர் மீது நடத்தப்பட்ட சோதனையைத் தொடர்ந்து இந்தக் கைதுகள் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட குழுவில் குற்றங்களுடன் நேரடியாகத் தொடர்புடைய 19 நபர்களும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 203 நபர்களும், திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 174 நபர்களும் அடங்குவர்.

மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டியதற்காக 72 பேரை பொலிஸார் கைது செய்தனர், அதே நேரத்தில் 13 பேர் மீது கவனக்குறைவாக வாகனம் ஓட்டியதற்காகவும், 3,680 பேர் மீது பிற போக்குவரத்து குற்றங்களுக்காகவும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

## கஞ்சாவுடன் இருவர் கைது

எஸ்.தில்லைநாதன்

சுமார் 7 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய கஞ்சா போதைப் பொருளுடன் இருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பாலித செனவிரத்ன தலைமையிலான குழுவினர் மறவன்புலவு - அறுகுவெளி பகுதியில் வைத்து இவர்களைக் கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி சுமார் 7 கோடி ரூபாய்க்கும் அதிகம் என்றும் கைதான இருவரும் குருநகர் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

**விற்பனைக்கு**

கல்கிசையில் காணி விற்பனைக்கு
25 பேர்ச் சதுரத் தொகுதி
(டெம்பிள்ஸ் சாலைக்கு வெளியே)
ஒரு பேர்ச் 3.5 மில்லியன் ரூபாய்.
(பேசித் தீர்மானிக்கலாம்)
தொடர்புக்கொள்ளவும் - 077 161 8311

## கம்பஹா மாநகர சபை

### 2025/2026 ஆம் ஆண்டிற்கான முன் கலந்த கான்கிரீட்டிற்கான (Ready Mix Concrete) விலைமனுக்கள் கோரப்படுகின்றன

2025/2016 ஆம் ஆண்டிற்கு அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள வீதிகளுக்கு முன் கான்கிரீட் கலவைகளை கொள்வனவு செய்வதற்கு பொருத்தமான நிறுவனத்தைத் தெரிவு செய்வதற்கு விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

- இதற்காக 2025.08.14 ஆம் திகதி முதல் 2025.08.27 ஆம் திகதி வரை அரசு வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை குறைக்கப்படும். (இது தொடர்புடைய அட்டவணையை அரச அலுவலக நேரங்களில் கம்பஹா மாநகர சபை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்)
- விலைமனுக்கள் 02 பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும், மேலும் 02 கடித உறைகளில் அசல் மற்றும் நகல் எனக் குறிப்பிடப்பட வேண்டும், மேலும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“2025/2026 ஆம் ஆண்டிற்கான கான்கிரீட் முன்கலவைகளுக்கான விலைமனுக்களுக்கான அழைப்பு”** என்று குறிப்பிடப்பட வேண்டும். இரண்டு பிரதிகளும் ஒரு கடித உறையில் வைக்கப்பட்டு, அதே கடித உறையில் **“2025/2026 ஆம் ஆண்டிற்கான கான்கிரீட் முன்கலவைகளுக்கான விலைமனுக்களுக்கான அழைப்பு”** என்று குறிப்பிடப்பட வேண்டும், மேலும் மாநகர சபை ஆணையர், கம்பஹா மாநகர சபை, மேரி பிசோ மாவத்தை, கம்பஹா என்ற முகவரிக்கு 2025.08.29 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியவாறு பதிவு தபாலில அல்லது நேரில் வந்து அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடப்பட வேண்டும்.
- அனைத்து விலைகளும் ஏயுவு உடன் மற்றும் இல்லாமல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- சமர்ப்பிக்கப்பட்ட ஏலங்களின் திறப்பு 2025.08.29 ஆம் திகதி அன்று பிற்பகல் 2.15 மணிக்கு மாநகர சபை மன்றக் குழு மண்டபத்தில் நடைபெறும், மேலும் ஏலதாரர் அல்லது ஏலங்களைச் சமர்ப்பிக்கும் நிறுவனங்களின் ஏலதாரரால் எழுத்துப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி கலந்து கொள்ளலாம்.
- திரும்பப் பெற முடியாத ஏலக் கட்டணம் ரூ. 2500.00.
- திரும்பப்பெறக்கூடிய டெண்டர் பாதுகாப்புத் தொகை ரூ.25000.00
- குறிப்பிட்ட தொகையை எங்கள் நிறுவனத்தில் செலுத்தி பெறப்பட்ட ரசீதின் நகலை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.
- இந்த ஏலங்களை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் கம்பஹா மாநகர சபையின் கொள்முதல் குழுவிற்கு உள்ளது.

**மாநகர சபை ஆணையர்,**
**கம்பஹா மாநகர சபை,**
**2025.08.14**
**தொ.பே: 033 4942302**

# குளத்துடன் கோபித்துக்கொண்டு கழுவாவிட்டால் நாறும்

முல்லைத்தீவு, முத்தையன்கட்டு இராணுவ முகாமிற்கு சென்ற இளைஞர்களில் ஒருவர் கொல்லப்பட்டமை கண்டித்தும் வடக்கு, கிழக்கில் இராணுவ பிரசன்னத்தைக் குறைக்குமாறு வலியுறுத்தியும், ஓகஸ்ட் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஹர்த்தால், திங்கட்கிழமைக்கு (17) ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, முத்தையன் கட்டுப் பகுதியில் வசித்து வரும் இளம் குடும்பஸ்தர் ஒருவர் தனது பொருளாதார நிலை காரணமாக வீடு அமைப்பதற்கான தகரத்தைப் பெறுவதற்காக இராணுவத்தினரின் அழைப்பின் பேரில் இராணுவ முகாமிற்கு வேறு சிலருடன் சென்றுள்ளார்.

குறித்த பகுதியில் நின்ற இராணுவத்தினர் குறித்த இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால் அவர்கள் அச்சத்தின் காரணமாக ஓடியுள்ளதுடன், ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இராணுவ முகாமுக்குள் சாதாரண நபர் செல்லமுடியாது. ஆக, காவலில் நின்றிருந்த இராணுவ வீரர் அனுமதியளித்துள்ளார்.

ஆனால், இராணுவ முகாமுக்குள் இருந்த இராணுவ வீரர்கள், அந்த இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால்தான், இராணுவ முகாமுக்குள் திருட வந்ததாக, பொலிஸ் தரப்பினரால் விளக்க அறிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில், இராணுவ வீரர்கள் ஐவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

யுத்தம் நிறைவடைந்து 16 வருடங்கள் கடந்தும் இராணுவத்தின் மனநிலையில் மாற்றம் ஏற்படவில்லை. அவர்கள், தமிழர்களை எதிரிகளாகவே இன்னும் பார்க்கின்றனர். என்பது முத்தையன் கட்டு சம்பவத்தில் இருந்து புலனாகிறது. அந்த இளைஞர்களைப் பிடித்து, பொலிஸாரிடம் ஒப்படைத்து விசாரணை செய்திருந்தால் உண்மை வெளியாகியிருக்கும் ஓர் உயிரை இழந்திருக்கவேண்டியதில்லை.

நிர்வாக முடக்கல் போராட்டத்திற்குத் தமிழரசுக் கட்சி அழைப்பு விடுத்திருக்கின்றது. அறிவிப்பு வெளியாகி இரண்டு மூன்று நாட்கள் கடந்து விட்டன. தமிழ் முற்போக்குக் கூட்டணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகள், போராட்டத்திற்கு தங்களின் தார்மீக ஆதரவையும் தெரிவித்திருக்கின்றன.

எனினும், ஏனைய தமிழ்க் கட்சிகள் எவ்விதமான கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை. இன்னுமே மௌனம் காத்துவருகின்றனர். ஓர் உயிர் இராணுவத்தால் அப்பட்டமாக அபகரிக்கப்பட்டுள்ளது. அதன் ஈரம் காய்வதற்குள் நிர்வாக முடக்கல் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த போராட்டத்தின் ஊடாக நீதி நியாயத்தை எதிர்பார்க்க முடியாது. எனினும், சர்வதேசத்துக்கு ஒரு பலத்த செய்தியைக் கொடுக்கமுடியும் என்பதே எமது அவதானிப்பாகும். அதற்கு கூட தமிழ்க்கட்சிகள் திராணியற்றவையாக இருக்கின்றன என்பதையிட்டு வெட்கித்தலைகுணிய வேண்டும்.

இங்கு ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்தது யார்? என்ற பிரச்சினையை ஏனைய தமிழ் கட்சிகளின் தலைமைகளிடம் இருக்கலாம். எனினும், அப்பாவி இளைஞனின் உயிர் காவு கொள்ளப்பட்டுள்ள நிலையில், போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தவர் யார்? என்பதைப் பார்த்துக்கொண்டிருப்பது குளத்துடன் கோபித்துக்கொண்டு குண்டியைக் கழுவாமல் விட்டால் நாறும் என்பதற்கு சமமாகும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

வாய்மையுடன் வாழும் முறைமையினைச் சின்ன வயதிலேயே பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டும். உண்மையை மட்டுமே பேசவேண்டும். எவர் சொல்லும் பொய்களையும் நம்பக்கூடாது. தெளிவுடன் பேசவேண்டும். எனச் சொல்லி வளர்த்தால் எல்லா இளம் தலைமுறைகளும் நல்லபடியாக, நற்பிரஜைகளாக; உயர்வடைவர்.

சில பெற்றோர்கள் பிள்ளைகளின் முன்னிலையில் பேசக்கூடாதவைகளைப் பேசுவதுண்டு. எக்காரணம் கொண்டும் பொய்யான வாக்குறுதிகளைச் சொல்வதுகூட மகா பாவம். ஒருவரை ஏமாற்றுவது தன்னைத்தான் ஏமாற்றுவது போலானது.

உள்ளதை, உள்ளபடி பேசத் துணிச்சல் வேண்டும். ஆனால், ஒருவர் பற்றிய நம்பிக்கை, விசுவாசம் ஏற்பட்டால் அவர்களின் கூற்றுக்களை ஏற்க யாவரும் முன் வருவார்கள். எனவே, நெஞ்சத்தூய்மையுடன் சத்திய வழியில் நடப்பதே வீரமுமாகும். வாழ்மையே வாழ்வின் மேன்மை.

– பருத்தியூர் பால.வயிரவநாதன்

# ‘ராஜபக்ஷக்களின் அலை’ அடிக்கத் தொடங்கும் அறிவிப்புக்கள் விடப்படுகின்றன

**முருகானந்தன் தவம்**

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி. (தேசிய மக்கள் சக்தி) ஆட்சியில் ஜே.வி.பி.யின் ‘மணி’ சத்தம் அதிகமாகி தேசிய மக்கள் சக்தியின் ‘திசைகாட்டி’ தவறாகத் திசை காட்டத் தொடங்கியுள்ளதால் ‘மாற்றம்’ என்ற கோஷம் மீது மக்கள் வைத்த எதிர்பார்ப்பு,நம்பிக்கை பொய்த்துப்போகத் தொடங்கியுள்ளது. இதனை ஓரளவுக்குத் தடுத்து நிறுத்தவே கடந்த வாரப் பாராளுமன்ற அமர்வில் ஜனாதிபதி ஒரு ஆக்ரோஷமான உரையை நிகழ்த்தி எதிர்க்கட்சிகளைக் கடுமையாகச் சாடியிருந்தார்.

ஜனாதிபதியின் இந்த ஆக்ரோஷமான உரைக்கு எதிர்க்கட்சிகள் தனது ஆட்சிக்குக் கொடுக்கும் குடைச்சல்கள் மட்டும் காரணமின்றி, ராஜபக்ஷக்களின் ‘மொட்டு’க்கு நாட்டில் மீண்டும் அதிகரித்துவரும் மக்கள் ஆதரவும் அது தொடர்பில் அரசுத் தரப்புக்குக் கிடைத்துள்ள புலனாய்வு எச்சரிக்கைகளுமே நாட்டிற்குள் அல்லது வெளியே இருந்து யாராவது இந்த நாட்டை கட்டியெழுப்பும் பயணத்தைச் சதித் திட்டங்கள் மூலம் நாசப்படுத்த முயன்றால், அவர்களைத் தோற்கடிக்க அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுப்போம்.எனவே, “ஆட்சிக் கவிழ்ப்பு சதித் திட்டம் தீட்டும் எண்ணம் வந்தாலும், அதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்” என பேச வைத்துள்ளது.

ராஜபக்ஷக்களின் குடும்பம் மீது குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் அவரது குடும்பத்தையும் இலக்கு வைத்து அனுரகுமார அரசு முன்னெடுத்து வரும் விசாரணை,கைது, விளக்கமறியல்,வழக்குகள் போன்ற விடயங்களும் அனுரகுமார அரசு கொடுத்த வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றாது ஊழல்.மோசடி எனக் கூறிக்கொண்டு அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடுவதுமே அனுரகுமார அரசை வீழ்ச்சிப் பாதைக்கும் ராஜபக்ஷக்களை எழுச்சிப் பாதைக்கும் கொண்டு வரத் தொடங்கியுள்ளது.

இவ்வாறான நிலையில் தான், ராஜபக்ஷக்களின் ‘ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன’வின் முன்னாள் அமைச்சரும் முக்கிய உறுப்பினரான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, இலங்கையில் உள்ள பல வெளிநாட்டுத் தூதரகங்கள் நாமல் ராஜபக்ஷவை நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக அடையாளம் கண்டுள்ளன. சமீபத்திய தூதரக விஜயர்களின்போது, நாம் சந்தித்த பல நாடுகளின் தலைவர்கள் மற்றும் இராஜதந்திரிகள், ராஜபக்ஷக்களின் அரசியல் எதிர்காலம் குறித்து இதேபோன்ற எதிர்பார்ப்புகளை வெளிப்படுத்தினர். பல்வேறு நாடுகளின் தலைவர்கள் நாமல் ராஜபக்ஷ உங்கள் தலைவர், அடுத்த ஜனாதிபதி என்று எம்மிடம் கூறினர்.

அதுமட்டுமன்றி, பொதுமக்கள் கலந்துரையாடல்கள், குறிப்பாக, கிராம மட்டத்தில், ராஜபக்ஷக்களுக்கு குறிப்பாக நாமல் ராஜபக்ஷவுக்குஆதரவு அதிகரித்து வருகின்றது. ஒரு கட்சியாக, நாமல் ராஜபக்ஷவின் பயணம் சிறப்பாக முன்னேறி வருவதாக நாங்கள் நம்புகிறோம். அடுத்த ஜனாதிபதியாக அவர் வருவதைப் பற்றி கிராம மக்கள் ஏற்கெனவே பேசத் தொடங்கி விட்டனர். நாமல் ராஜபக்ஷவின் அதிகரித்து வரும் செல்வாக்கு குறித்த அச்சம் காரணமாகவே, தற்போதைய அரசாங்கம் பொய்க் குற்றச்சாட்டுகளைப் பயன்படுத்தி ராஜபக்ஷவினரை அவமதிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அவர்களுக்குப் பயமாக இருக்கும்போது, அவர்கள் வழக்குகளைத் தாக்கல் செய்து அவரை சிறையில் அடைக்க முயற்சிக்கின்றனர். நாமல் ராஜபக்ஷ வருகிறார் என்பது அவர்களுக்குத் தெரியும். இது குறித்து புலனாய்வுப் பிரிவுகள் “ஏற்கெனவே தமது அறிக்கைகளை அரசுக்கு சமர்ப்பித்துள்ளன” என்று கூறியுள்ளார்.

ஆட்சி மாற்றத்துக்காக 2029ஆம் ஆண்டுவரை காத்திருக்க வேண்டியதில்லை. அதற்கு முன்னர்கூட ஜனநாயக வழியில் அது நடக்கலாம். அடுத்த ஜனாதிபதி நாமல் ராஜபக்ஷ என்பது மக்களின் கருத்தாகும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்து, அனுரகுமார அரசுக்கு கலக்கத்தைக் கொடுத்துள்ளது. இது தொடர்பில் அக்கட்சியின் பேச்சாளரான முன்னாள் எம்.பி. சஜ்ஜீவ எதிரிமான்ன கூறுகையில், “அடுத்த ஜனாதிபதி யார்? என்ற கருத்தாடல் சமூகத்தில் உருவாகியுள்ளது. அனுரதான் அடுத்த ஜனாதிபதி என்றோ அல்லது பிரதான எதிரணி ஆட்சியைக் கைப்பற்றும் என்றோ சமூகத்தில் கருத்துகள் இல்லை. நாமலைப் பற்றிதான் தேடப்படுகின்றது. நாமல்தான் அடுத்த ஜனாதிபதி என்ற கருத்தை நாம் உருவாக்கவில்லை. அது சமூகத்தின் பிரதிபலிப்பாக உள்ளது.

இயற்கையாகவேதான் அந்த கருத்தாடல் உருவாகியுள்ளது. ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் 4 வருடங்கள் உள்ளன என்பது உச்சபட்ச கால எல்லை . எனினும், அதற்கு முன்னர் ஆட்சியை மாற்றலாம். இலங்கையில் இதற்கு முன்னர் அப்படி நடந்தும் உள்ளது. பதவி காலம் முடியும்வரை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பயணிக்கும் என்பதற்குரிய அறிகுறிகள் இல்லை. அரசியலமைப்பு ரீதியாகக்கூட ஆட்சி மாற்றம் இடம்பெறலாம். ஜனநாயக வழியிலேயே ஆட்சி மாற்றம் நிகழக்கூடும் என தெரிவித்துள்ளார்.

அடுத்த அரசாங்கத்தை உருவாக்க வல்ல பரம்பரையை அணி திரட்ட ஒன்றிணையுமாறு அழைப்பு விடுத்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் எம்.பியுமான நாமல் ராஜபக்ஷவும் ,ஏமாற்றத்தைப் பொறுத்தது போதும், இனி அதிலிருந்து எழுவோம். மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவே எம்முடைய கட்சி உழைத்தது. நாம் பௌத்தர்கள் மாறாக இனவாதிகள் அல்ல. இளைஞர், யுவதிகளின் புதிய பரம்பரைக்கு ஏற்ற அரசியலை உருவாக்க நாம் தயார்.பொய்யுரைத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கமாக அனுர அரசாங்கம் மாறியுள்ளது.எம்மை அரசாங்கம் அதிகம் தாக்குகின்றது. அதற்கு காரணம் எம்மை பார்த்து ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் அஞ்சுகின்றது. காரணம் நாம் கொள்கை அடிப்படையிலான அரசியலை முன்னெடுத்துச் செல்கின்றோம்.எம்முடைய கட்சி நாட்டை சேதப்படுத்தும் கட்சி அல்ல. மாறாக பயங்கரவாத்தை நிறைவுக்குக் கொண்டு வந்து ஆசியாவில் விரைவாக அபிவிருத்தி அடையும் நாடாக ஆக்கிய கட்சியே எம்முடைய கட்சி .அடுத்த ஜனாதிபதி எம்முடைய கட்சியிலிருந்தே தெரிவு செய்யப்படுவார் என ஏற்கெனவே தெரிவித்திருந்தார்.

இவ்வாறான சூழலில், தமிழ்த் தேசிய அரசியலின் புது வரவும் சர்ச்சைக்குரியவருமான அர்ச்சுனா இராம நாதன் எம்.பியும் ‘நாமல் ராஜபக்ஷவே அடுத்த ஜனாதிபதி. அவர் ஜனாதிபதியாக நான் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவேன். இதனை நான் அவரிடம் நேரிலும் தெரிவித்துள்ளேன். அவரின் தந்தை, சித்தப்பாமார் தமிழ் மக்களுக்குச் செய்த வேலைகளை அவர் தமிழ் மக்களுக்குச் செய்யக்கூடாது என்றும் நேரடியாகக் கூறியுள்ளேன்.அதற்கான உத்தரவாதத்தை அவர் எனக்கு வழங்கியுள்ளார்” என சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்து ‘அடுத்த ஜனாதிபதி நாமல்’ என்ற எதிர்பார்ப்பை அதிகரிக்க வைத்துள்ளார்.

இலங்கையிலே குடும்ப அரசியல் ஆதிக்கம் என்பது பெருமளவுக்கு பண்டாரநாயக்க குடும்பத்துடனேயே அடையாளப்படுத்தப்பட்ட ஒன்றாக இருந்துவந்தது. ஆனால் அதனை ராஜபக்ஷக்கள் மாற்றி ‘ராஜபக்ஷ குடும்ப ஆட்சி’ என்ற வரலாற்றை எழுதினர். அவர்களின் குடும்ப ஆட்சி எந்தளவுக்கு அவர்களுக்கு பலத்தைக் கொடுத்ததோ, அதுவே பின்னர் பலவீனமாகவும் மாறி அவர்களின் குடும்ப ஆட்சியை விரட்டியது. அதன்பின்னர் மக்கள் மாற்றமான ஆட்சி ஒன்றை எதிர் பார்த்த நிலையில்தான் அதனைப் பயன்படுத்தி தமது பிரசார ஆயுதத்தின் மூலம் அனுரகுமார தலைமையிலான ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தி ஆட்சிபீடம் ஏறியது. ஆனால், அவர்கள் ‘வாய்ச் சொல் வீரர்’களாக மட்டுமே இருக்கின்றனர். இதனால் இவர்கள் மீது ‘ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள்’ என்றவாறாக மக்களுக்கிருந்த மயக்கம் தெளிந்து வருகின்றது.

இவ்வாறான நிலையில், இலங்கை அரசியலில் மாற்று அரசியல் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ரணில் அணி, சஜித் அணி என பிளவுண்டு மீண்டும் அணி சேர வாய்ப்பில்லாத நிலையில், இருப்பதால் மக்கள் இவர்கள் மீது நம்பிக்கை வைக்கத் தயாரில்லை. அதனால்தான் ராஜபக்ஷக்கள் என்னதான் ஊழல்களில் ஈடுபட்டிருந்தாலும், அவர்கள் தான் யுத்தத்தை முடித்து வைத்தவர்கள். நாட்டை அபிவிருத்தி பாதைக்குக் கொண்டுவந்தவர்கள்.அவர்களின் ஆட்சிக்குப் பின்னர் நாட்டில் எந்தவொரு அபிவிருத்தியும் இடம்பெறவில்லை, மக்களுக்கு விமோசனமும் கிடைக்கவில்லை என்ற கருத்துக்கள் மீண்டும் வலுப்பெற்று வரும் நிலையில்தான் தற்போது மீண்டும் ‘ராஜபக்ஷக்களின் அலை’ அடிக்கத் தொடங்கும் அறிவிப்புக்கள் விடப்படுகின்றன.

## கடிதங்கள்


### மின் குமிழ்கள் ஒளிராததால் மக்கள் அவதி

மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட மஸ்கெலியா நகரிலும் ஏனைய பகுதிகளிலும் பொருத்தப்பட்டுள்ள வீதியின் மின் குமிழ்கள் ஒளிராததால் அப்பகுதி மக்கள் இரவு நேரங்களில் கடும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர்.

இதனால் இரவு நேரங்களில் பயணிக்கும் மாணவர்கள், முதியவர்கள் நோயாளிகள் பாரிய அளவில் இன்னல்களைச் சந்திக்க வேண்டியுள்ளது.

இது தொடர்பாக மஸ்கெலியா பிரதேச சபையினர் கவனம் செலுத்தி மின் குமிழ்களை ஒளிரச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச வாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– செ.தி பெருமாள்



# சமூக இழிவை குறைக்கும் நூலறிவு



டிலக்சனா விஜயகுமார், முதலாம் வருட மாணவி, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

ஒரு சமூகத்தின் தரத்தினையும் ஏனையவர்களால் வழங்கப்படும் மதிப்பினையும் இழக்கும்படியாக சமுதாயத்தில் இடம்பெறும் நடத்தைகள் தான் சமூக இழிவு என்று பொதுவான சில கருத்துக்கள் காணப்படுகின்றன. சமூகத்தின் அங்கத்தவர்களிடம் எது சமூக இழிவு? அல்லது ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும்போது எம் சமூகத்தினை தாழ்வடையச் செய்யும் விடயம் என்ன? என்று கேட்டால் ஒவ்வொருவரினதும் கருத்துக்களும் சற்று வித்தியாகப்பட்டதாகக் காணப்படும். அவ்வாறாக மக்களால் சமூக இழிவு எனக் கூறப்படும் விடயங்கள் எவை? என்று நோக்கும் போது சாதி, மத, இனப்பாகுபாடு ஏற்றத்தாழ்வு, ஆண், பெண் சமத்துவமின்மை, பெண்கள், சிறுவர் துஷ்பிரயோகம் இயற்கையை அழித்தல், தரமான கல்வியின்மை, பெரியோர்களுக்கு மதிப்பளிக்காமை போன்ற பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்படும். ஆனால் இவை அல்ல உண்மையான சமூக இழிவு. உண்மையில் அறிவின்மை தான் உண்மையான சமூக இழிவு.

எனக்கு ஒரு கேள்வி? என்னவென்றால் அறிவு தரும் மற்றும் நம்மை நாம் உணரவழி செய்யும் நூல்களை கற்று தேர்ந்த ஒருவர் இனவெறிக்கு அடிபணிவாரா? என்னுடைய சாதி பெரிது உன்னுடைய சாதி தாழ்மைப்பட்டது என்று கேலி பேச்சுகளிலும் ஈடுபடுவாரா? நன்னூல்களை கற்றுத் தேர்ந்த அம்பேத்கர் கூட முதலில் இங்கிருந்து தகர்த்தெறிய முற்பட்டது சாதியைத்தான். சூழலியல் தொடர்பான நூல்களை கற்ற ஒருவனுக்கு இயற்கையின் அவசியம் என்ன? என தெரியாமல் போய்விடுமா? இயற்கை அழிக்கும் வகையிலான செயல்பாடுகளில் ஈடுபட அவன் முனைவானா?

ஒவ்வொரு விடயங்களிலும் நமது ஆற்றலை சுயமாக நாம் வளர்த்துக் கொள்ள நூல்கள் எமக்குத் துணையாக உள்ளன. ஆனால் உலக அளவில் அதிக நூல்களை வாசிக்கும் நாடு எது? என்று கேட்டால் அமெரிக்காவா? ஆஸ்திரேலியாவா? பின்லாந்தா? என்று யோசிப்போம். ஆனால் உண்மையில் அதிகம் வாசிக்கும் நாடு இந்தியா! ஆனால் அங்கும் ஒரு கேள்வி காணப்படுகின்றது. அதிகம் வாசிக்கும் மக்களைக் கொண்ட நாடு இந்தியா தான் .ஆனால் இந்தியாவிற்குள் வாசிப்பு வீதத்தினை அதிகரிக்கச் செய்பவர்கள் இளைஞர்களா? அல்லது வயோதிபர்களா ?

இன்றைக்குப் பாடநூல்களைத் தவிர, எம்மில் எத்தனை பேர் சுய முன்னேற்ற நூல்கள், எமக்குப் பிடித்த வகையான நூல்கள், புரட்சிகள், கண்டுபிடிப்பாளர்கள், கடல் பயண சாகசங்களை மேற்கொண்டு புதிய நாடுகளைக் கண்டறிந்தவர்களின் வாழ்க்கை வரலாறுகள், அறிஞர்களின் வரலாறுகள், பொது அறிவு சார் நூல்கள் என இவ்வாறான நூல்களைத் தேடி வாசிக்கின்றோம் என்று கேட்டால் மிகச் சொற்ப அளவானவர்கள் தான் காணப்படுவார்கள்.

அதிகம் நம் நேரத்தினை சமூக வலைத்தளங்களை மையப்படுத்திச் செலவழிக்கின்றோம். ஆனால், எது உண்மையில் எம் வாழ்க்கைக்கு அவசியமானது? எது நம் வாழ்க்கைக்குத் தேவையானது? எது எம் வாழ்வை வளப்படுத்தும் போன்ற விடயங்களை நாம் கவனிக்க மறந்து விடுகின்றோம். நமது தேவைக்காக சமூக வலைத்தளங்களைப் பாவித்தால் அதனை உபயோகிக்கின்றோம். என்று கூறுவோம் ஆனால் மாறாக அவை எம்மை அடிமைப்படுத்தி உபயோகிக்க வைத்தால் அதனை எவ்வாறு கூற இயலும்? அதற்கு என்ன பெயர் வைக்க முடியும்?

குறிப்பிட்ட சுழற்சியில் ஓடிக்கொண்டிருக்கும் எம் வாழ்வை வளப்படுத்தக் கூடியது நூல்கள் தான். நூல்களை வாசித்தால் கற்பனை சக்தி விரிவடையும் என்பார்களே அதற்கு ஒரு உதாரணத்தை நோக்கினால் என்ன? பொன்னியின் செல்வன் காவியக் கதை. நாம் வாசிக்கும்போது, குந்தவை, ஆதித்த கரிகாலன், அருண்மொழிவர்மன், வந்தியத்தேவன் என்பவர்களுக்கு மனதளவில் நாம் ஒரு உருவம் கொடுத்து வைத்திருப்போம். ஆனால் திரைப்படமாகப் பொன்னியின் செல்வன் வெளியான பின்னர் குந்தவைக்கோ அல்லது ஆதித்த கரிகால சோழனுக்கோ இன்னொரு உருவத்தினை கற்பனை செய்ய முடிகின்றதா? கேள்விக்கு விடை அனைவரும் யோசிக்க வேண்டிய ஒன்றுதான்.

இப்போது காணப்படும் நம் தலைமுறை சற்றாவது இதிகாசக் கதைகளை நூல்களை அணுகித்தெரிந்து கொள்கின்றோம். எதிர்காலத்தில் நூல்களை முதலில் வாசிப்பார்களா? திரைப்படங்களை முதலில் பார்ப்பார்களா?இன்னும் சிலர் புத்தகங்களைக் காணொளிகளாகக் கேட்கும் பழக்கம் கொண்டவர்கள். புத்தகங்களை வாசித்தால் என்ன? காணொளிகளாகக் கேட்டால் என்ன? இரண்டும் ஒன்றுதானே என்பார்கள் எனக்கு ஒரு கேள்வி இதில் காணொளிகளாக ஒலி, ஒளி வடிவில் கேட்பவர்களால் இலகுவில் மையக் கருத்தினை கூற இயலுமா? அல்லது கைகளால் தொட்டு மனதால் புத்தகத்தில் சொல்லப்பட்ட விடயங்களை வாசித்தவர்களால் அதன் மையக்கருத்தினை இலகுவில் கூற இயலுமா? ஆனால், நடைமுறையில் காணொளிகளில் ஒலி, ஒளி வடிவில் அணுகுவதைக் காட்டிலும் நூல்களை வாசிப்பது சற்றே நம்மை சலிப்புடைய செய்வதாகவும் இருக்கலாம்.

உலகில் மிகப் பெரும் பணக்காரர்களாகக் காணப்பட்டவர்கள் சிலர் வருடத்தில் இரண்டு மாதங்கள் நூல்களை வாசிப்பதற்காக விடுமுறை எடுத்துக் கொள்வார்களாம். அந்த ஆண்டில் வெளிவந்த மிக முக்கியமான நூல்களை வாசிக்க இரு மாதங்களைப் பயன்படுத்துவார்களாம்.

ஒரு சமூகத்தினை இழிவடைய செய்வதும் உயர்வடையச்செய்வதும் நாம் கொண்டுள்ள அறிவைப் பொறுத்தது. அறிவைப் பெருக்கச் சிறந்த வழி நூல்கள். காலத்திற்குக் காலம் இவ்வுலகில் வாழ்ந்து தம் அனுபவங்கள் மூலம் உலக வாழ்வில் கண்டுபிடிப்புகள், ஆலோசனைகளை எமக்காக விட்டுச் சென்றுள்ளார்கள். நல்ல விடயங்களை யாரிடம் இருந்தும் எடுத்துக் கொள்ளலாம். அதில் தவறு என்ன இருக்கின்றது? தற்போது பாடசாலைகள், பல்கலைக்கழகங்களில் மட்டுமல்லாமல் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட பொது நூலகங்களும் காணப்படுகின்றன. ஆனால் மிகச் சொற்ப அளவானவர்கள் தான் அங்குள்ள நூல்களைப் பயன்படுத்துகிறார்கள். நாளாந்தம் வெளிவரும் பத்திரிகைகளில் ஒன்றிணைவது நாம் வாசிக்கின்றோமா? அன்றாட உலகில் என்ன நடைபெறுகின்றன என்பதைத் தெரிந்து கொள்கின்றோமா? நமது பொது அறிவு எப்படி உள்ளது?

இன்று பட்டப் படிப்பினையை முடித்த பின்னர் அரசு நிர்வாகத்திற்குள் வேலைக்குச் செல்ல வேண்டும் என்றால் பொது அறிவு நிச்சயம் பரீட்சிக்கப்படும்.

சமூகத்தில் இழிவான விடயங்கள் என்று நாம் கருதுபவை நிச்சயமாக அறியாமை காரணமாக நிகழ்கின்றன. அறியாமையை நீக்க நூல் அறிவு துணை நிற்கின்றது. சமூகத்தின் கடைசி குடிமகனும் நூல்களை வாசிக்கத் தொடங்கும் பொழுது தான் உண்மையில் அச்சமூகம் நற்சமூகமாகின்றது. அங்கு இழிவான கருதப்படும் செயல்கள் ஒழிகின்றது.

காலம் காலமாக நாம் நம் சமூகத்தில் இருந்து ஒழிக்க வேண்டிய ஒரு விடயம் என சாதியைக் கருதி வந்தோம். நவீன யுகத்தில் உண்டான மாற்றங்களுடனும் வளர்ச்சியுடனும் சாதி பாகுபாடு இல்லாமல் ஒழிந்து விட்டதாகவும் நம்பி வருகின்றோம். ஆனால், அறியாமையால் நடைபெறும் சில சம்பவங்களைக் காணும் பொழுது விளங்குகின்றது எதுவும் இங்கு மாறவில்லை என. மனொதருமித்த இருவரின் காதல் மறுக்கப்பட்டது. சாதிப் பாகுபாட்டால் மறுக்கப்பட்டதா? அல்லது காதலித்தவர் உயிரும் பறிக்கப்பட்டதா? உண்மையில் அறியாமையை விட்டதென்று நூல்களை கற்று அறிந்து தம் அறிவினை பெருக்கிக் கொண்டவர்கள் ஒருபோதும் சாதியைப் பெரிது படுத்துவதில்லை. சொல்லப் போனால் சாதி என்று ஒரு விடயம் இருக்கின்றது என்று அவர்கள் நினைப்பதில்லை. அறியாமையில் மூழ்கியுள்ளவர்கள் சாதி என்ற வட்டத்தினை அடுத்து எதுவும் சிந்திப்பதில்லை.

ஆக, சமூகத்தில் உண்டாகும் குற்றங்களுக்கான பிரதான காரணம் அறியாமை. நூலறிவின்மை. அறிவார்ந்த ஒருவர் குற்றம் இழைக்கவும் மாட்டார். குற்றச் செயல்களுக்குத் துணை செல்லவும் மாட்டார். காலத்தின் வேகத்தில் நாம் கற்பது ஒருபுறம். வாழ்ந்தவர்கள் சொன்ன அனுபவப் புத்தகம் ஒரு புறம். இரண்டும் சேர்ந்து ஒரு அறியாமை நீங்கிய சமூக இழிவுகள் இல்லாத புதிய வாழ்க்கையைப் படைக்கலாம்.



## தரமான மாணவச் சமுதாயத்தை உருவாக்க


# ஆரோக்கியமான கல்வி அவசியம்





எஸ்.நித்தியஶ்ரீ, கல்வி முதுமாணி
கற்கை நெறி ஆசிரியர்

மனித வாழ்வினை வளமாக்கி ஈடேற்றுவதற்கான மிக முக்கியமான அரிய கருவி கல்வியாகும். கல்வியானது பொருளாதார மேம்பாட்டிற்கான வழிமுறைகளை மாத்திரம் அல்லாமல் மனித குலத்தின் விடுதலைக்கான செயன்முறைகளையும் கொண்டமைதல் வேண்டும் என பல கல்வியல் சிந்தனையாளர்கள் தமது கருத்துக்களை ஆழமாகத் தெரிவித்துள்ளனர். அன்றாடம் பெருகி வரும் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி, அறிவுத் தாகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப மாற்றங்கள் போன்றவை கல்வியின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் வலியுறுத்துகின்றன. மாணவர்களால் அடைய எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளும் கல்வி இலக்குகளும் இன்றைய சூழ்நிலையில் மிகவும் அவசியமானதாகக் கருதப்படுகிறது. இன்றைய நவீன உலகிற்கு வெற்றிகரமாக முகங்கொடுக்கக் கூடியவர்களையும் நவீன பொருளாதார தேவைகளை நிறைவு செய்யக் கூடியவர்களையும் சமுக பண்பாட்டு விழுமியங்களை மதித்துப் பேணவல்ல மனித சமுதாயத்தை உருவாக்கும் பணி இன்றைய கல்விக்குரியதாகும். இவ்வாறான இலக்குகளை அடைவதற்காகவே இன்றைய கல்விக்களம் காணப்படுகின்றது.



ஆரோக்கியமான ஒரு கல்விச் செயற்பாடு இடம்பெற வேண்டுமாயின் அதற்குத் தகுந்த கற்றல் சூழல் அவசியமாகும். அதாவது மாணவர்களுக்கு உகந்த வாய்ப்பான ஒரு சூழலிலேயே மாணவர்கள் ஒரு தரமான கல்வியை பெற கூடியதாக இருக்கும். அந்த வகையில் நோக்கும் போது கற்றலுக்கான மனித வளங்கள், பௌதிக வளங்கள் என்பன பாடசாலை சார்ந்த காரணிகள் ஆகும். குடும்ப சூழல், சமூக ஏற்றத்தாழ்வுகள், வசதி வாய்ப்புகள், சமூக வன்முறை போன்றன சமுகம் சார்ந்த காரணிகள் ஆகும். இவையனைத்தும் மாணவர்களின் கற்றல் புறச்சூழலை உருவாக்குகின்றன.

இன்றைய காலகட்டத்தில் சில மாணவர்களுக்கு இந்த புறச்சூழலானது வாய்ப்பாக அமைவதில்லை. இதனால் மாணவர்கள் தங்கள் கல்வி இலக்கை அடைவதிலும் கற்றல் செயற்பாட்டில் திறம்பட மிளிர்வதற்கும் இடையூறுகளை எதிர்நோக்குகின்றனர். இதனால் பாடசாலையில் மாணவர்களின் இடைவிலகல்கள், ஒழுங்கற்ற வரவு, ஒழுக்கம் தொடர்பான பிறழ்வுகள், உளப்பாதிப்புகள், கற்றலில் பின்னடைவு அடைதல் போன்றவாறான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இவ்வாறான பிரச்சினைகளைக் கருத்தில் கொள்ளாமலும் நீக்கப்படாமலும் மாணவர்களை கற்றல் செயற்பாடுகளில் திறம்பட ஈடுபடுத்த முயல்வது பொருத்தமற்றதாகும் .

மாணவர்களுக்குக் கல்வியை வழங்கும் ஒரு பிரதான நிறுவனம் பாடசாலை ஆகும். பாடசாலையானது வெறுமனே கல்வியை மட்டும் வழங்கும் நிறுவனமாக மட்டுமன்றி இணைப் பாட விதான செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் நிறுவனமாகவும் சமுகத்துக்குப் பொருத்தமான மாணவச் சமுதாயத்தை உருவாக்கும் நிறுவனமாகவும் திகழ்கிறது. மேலும், பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் கல்வி சார்ந்த மற்றும் சூழல் சார்ந்த பிரச்சனைகளை இனங்காணவும் அவற்றுக்குப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உதவி புரிவதோடு தேவையேற்படின் மேலதிக ஆலோசனைக்காகப் பரிந்துரை செய்யவும் மாணவர்களின் எதிர்கால வாழ்விற்குத் தேவையான தொழில் வழிகாட்டல்களையும் மேற்கொள்கின்றனர். இதற்காகக் கல்வி அமைச்சும் பல்வேறு தொண்டர் நிறுவனங்களும் பல்வேறு பயிற்சிகளை அதிபர், ஆசிரியர்களுக்கு வழங்குவதுடன் அந்நிறுவனங்களும் முன்வந்து பாடசாலை மாணவர்களுக்கு பல்வேறு ஆலோசனை வழிகாட்டல்களை வழங்குகின்றன.

இவ்வாறு மாணவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள், உளப்பாதிப்புகள் என்பவற்றிற்கான ஆலோசனை வழிகாட்டல்களை ஆசிரியர்களும் ஆசிரிய உளவளத் துணையாளர்களும் தொண்டர் நிறுவனங்களும் மேற்கொண்டாலும் சில சந்தர்ப்பங்களில் இந்த பாடசாலை மட்ட வழிகாட்டல்கள் மாணவர்களுக்கு போதுமானதாக அமைவதில்லை.

மாணவர்களைப் பொருத்த வரையில் பாடசாலை நேரத்தை தவிர ஏனைய நேரத்தை வீட்டுச் சூழலிலும் சமூகச் சூழலிலும் அதிகமாகச் செலவழிக்கின்றனர். இச்சூழல் மாணவர்களின் நடத்தையில் பெரியதொரு தாக்கத்தினை செலுத்துகிறது. பெற்றோர் இருவரும் தொழிலுக்குச் செல்கின்றமை, பொருளாதாரத்திற்காக வெளிநாடு செல்லும் பெற்றோர், கற்றலுக்கு பொருத்தமற்ற குடியிருப்பு சூழல், வருமானம் குறைவான குடும்பச் சூழல், போசாக்கின்மை, கூடுதல் நேரத்தை நவீன தொடர்பாடல் தொழில்நுட்ப சாதனங்கள் பயன்படுத்துவதில் செலவிடல், வயதுக்கு மீறிய நண்பர் குழாமுடன் நட்புறவாக இருத்தல், பாலியல் துஷ்பிரயோகம் போன்ற பல்வேறு விதமான பிரச்சினைகள் பாடசாலைக்கு வெளியிலிருந்து மாணவர்களின் நடத்தை , உளச்செயற்பாடுகள், திறன்கள், கற்றல் நாட்டம் போன்றவற்றில் தாக்கம் செலுத்துகின்றன. இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிப்படைகின்றன.

பாடசாலை சார் அணுகுமுறைகளும் சூழல் சார் அணுகுமுறைகளும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. அவை தனித்தனியாக இருக்காது ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையாக இருக்க வேண்டும். மாணவர்களின் கற்றல் சிறப்புற வேண்டுமாயின் மாணவர்களின் கற்றலுக்கு தேவையான வீட்டு, சமூகச் சூழலை உருவாக்க வேண்டியது பெற்றோரினதும் சமூகத்தினரும் கடமையாகும். மாணவர்களின் வீட்டுச் சூழல், சமூகச் சூழல், உதவிகள் புரிகின்ற நிறுவனங்கள் பற்றிய தெளிவு பாடசாலை சமூகத்தினரிடையேயும் பாடசாலையில் நடைபெறும் கல்விச் செயற்பாடுகள், புதிய அணுகுமுறைகள், மாணவர்கள் சார்ந்த பிரச்சனைகள் பற்றிய தெளிவு குடும்பத்தினருக்கும் சமூகத்தவர்களுக்கும் இருத்தல் வேண்டும். இரு தரப்பினரும் கடமைகள் பற்றிய விழிப்புணர்வுடன் இருப்பதுடன் ஏனைய தரப்பினருடன் தொடர்பாடலை வைத்திருத்தல் வேண்டும். தேவையேற்படின், ஆலோசனை வழங்குவதும் அவசியம் ஆகும்.

மாணவர்களின் கல்வி செயற்பாடுகள், ஆளுமை விருத்தி செயற்பாடுகள், அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைக்கான தீர்வுகள் என்பவற்றில் ஆசிரியர்களின் பங்களிப்பு, பெற்றோர்களின் பங்களிப்பு, சமுகத்தின் பங்களிப்பு என்பவை இன்றியமையாதவை ஆகும். மாணவர்கள் தமது இலக்குகளை அடைவதற்குப் பாடசாலை, பெற்றோர், சமுகம் என்பவற்றின் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் அத்தியாவசியமானதாகவும் தேவையானதாகவும் காணப்படுகின்றது. இவ்வாறான ஒன்றிணைந்த அணுகுமுறைகள் மூலமே ஆரோக்கியமான கல்வி செயற்பாட்டினை மேற்கொண்டு தரமான மாணவச் சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

ஜெனிவா

### மியன்மார் பாதுகாப்புப் படையினர் பெரும்

# சித்திரவதைகளில் ஈடுபடுகின்றனர்



மியன்மார் பாதுகாப்புப் படைகள் திட்டமிட்ட சித்திரவதைச் செயல்களில் ஈடுபடுவதற்கான ஆதாரங்களைக் கண்டுபிடித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் புலன் விசாரணையாளர்கள் கூறியுள்ளனர்.

இதன் தொடர்பில் செவ்வாய்க்கிழமை (12) அன்று 16 பக்க அறிக்கையை வெளியிட்ட அவர்கள், மூத்த குற்றவாளிகள் சிலரை அடையாளம் கண்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த ஜூன் 30ஆம் திகதி வரையிலான கிட்டத்தட்ட ஓராண்டு நிலைவரம் குறித்த அந்த அறிக்கை, 1,300க்கு மேற்பட்டோரிடமிருந்து திரட்டப்பட்ட தகவல்கள், நூற்றுக்கணக்கானோரின் சாட்சியங்கள், தடயவியல் ஆதாரம், ஆவணங்கள், படங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

மியன்மாருக்கான தனிப்பட்ட புலன் விசாரணைக் குழு (IIIM), 2018ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

அனைத்துலகச் சட்டம் கடுமையாக மீறப்பட்ட சம்பவங்களை ஆய்வு செய்ய அது அமைக்கப்பட்டது.

பாதிக்கப்பட்டோர் அடி, கழுத்தை நெரித்தல், உடலில் மின்சாரம் பாய்ச்சுதல், குறடுகளைப் பயன்படுத்தி விரல் நகங்களைப் பிடுங்குதல் போன்ற பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டதாக 'ஐஐஐஎம்' கூறியது.


"சம்பவங்களை நேரில் பார்த்தவர்களின் சாட்சியம் உட்பட குறிப்பிடத்தக்க ஆதாரங்களைச் சேகரித்துள்ளோம். மியன்மார் தடுப்புக் காவல் நிலையங்களில் திட்டமிட்ட கொடுஞ்செயல்கள் மேற்கொள்ளப்பட்டதை அவை காட்டுகின்றன" என்று 'ஐஐஐஎம்' குழுவின் தலைவர் நிக்கோலஸ் கூம்ஜியன் கூறியுள்ளார்.

கொடுஞ்செயல்களால் உயிரிழப்புகள் ஏற்பட்டதாகவும் பெற்றோரைக் காணவில்லை என்பதற்காகச் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்ட சிறுவர்களும் கொடுமைக்கு ஆளானதாகவும் அறிக்கை கூறுகிறது.

இதன் தொடர்பில் 'ஐஐஐஎம்' குழு கிட்டத்தட்ட 25 முறைக்குமேல் தகவல்களைக் கோரியபோதும் மியன்மார் அரசாங்கம் பதிலளிக்கவில்லை. குழுவினர் அந்நாட்டிற்குச் செல்வதற்கும் அது அனுமதி வழங்கவில்லை.

அமைதியையும் பாதுகாப்பையும் உறுதிசெய்யும் கடமை தனக்கிருப்பதாகக் கூறும் மியன்மார் இராணுவம் கொடுஞ்செயல்கள் நடந்ததாகக் கூறப்படுவதை நிராகரித்தது. மேலும், பயங்கரவாதிகளால் பதற்றம் ஏற்படுவதாகவும் அது கூறியது.

# சிட்னி விமான நிலையத்தில் பதற்றம்



ஆஸ்திரேலியாவின் சிட்னி விமான நிலையத்தில் காவல்துறை அதிகாரியின் துப்பாக்கியைக் கைப்பற்ற முயன்ற ஆடவர் கைதாகியுள்ளார். இந்த சம்பவம் புதன்கிழமை (13) காலை நடந்தது.

ஆடவர் அதிகாரியிடமிருந்து துப்பாக்கியைப் பலவந்தமாகப் பிடுங்க முயன்றார். அப்போது எதிர்பாராதவிதமாகத் துப்பாக்கி சுடப்பட்டது என அந்நாட்டு பொலிஸ் துறை தெரிவித்தது. யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

உள்ளூர் ஊடகம் ஒன்று வெளியிட்ட காணொளியில் ஆடவரை இருவர் தரையில் அழுத்திப் பிடித்திருப்பதையும் அதிகாரி தமது துப்பாக்கியைச் சோதனையிடுவதையும் காணமுடிந்தது.

சம்பவத்தைக் கண்டவர்கள் பெரும் வெடிப்புச் சத்தம் கேட்டது என்றும் சம்பவயிடம் அருகே இருந்த உணவகம் தற்காலிகமாக மூடப்பட்டது என்றும் கூறினர்.

ஆடவர் கைதான பிறகு பொதுமக்களின் பாதுகாப்பிற்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என்று பொலிஸ் துறை குறிப்பிட்டது.

புதுடெல்லி

# அமெரிக்கா செல்கிறார் பிரதமர் மோடி?

செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் வருடாந்திர உயர்மட்ட விவாதத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று உரையாற்ற வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் 80ஆவது பொதுச் சபைக் கூட்டத் தொடர் செப்டெம்பர் 9ஆம் தேதி தொடங்குகிறது. இந்த கூட்டத்தொடரில் உயர்மட்ட பொது விவாதம் செப். 23 முதல் 29 வரை நடைபெற உள்ளது. இந்த தொடரின் முதல் பாரம்பரிய பேச்சாளராக பிரேசில் உள்ளது. பிரேசில் அரசு தலைவரின் உரையை அடுத்து, அமெரிக்க அதிபரின் உரை இருக்கும். ஐநா பொதுச் சபை மேடையில் உலக தலைவர்கள் மத்தியில் செப். 23ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உரை நிகழ்த்த உள்ளார்.

இந்த உயர்மட்ட விவாதத்துக்கான தற்காலிக பேச்சாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, இந்திய அரசாங்கத் தலைவர் செப். 26ஆம் திகதி ஐநா பொதுச் சபை மேடையில் உரையாற்றுவார். அதே தினத்தன்று, சீனா, இஸ்ரேல், பாகிஸ்தான், வங்கதேச அரசு தலைவர்களும் உரை நிகழ்த்தவுள்ளனர்.

ஐ.நா. பொதுச் சபையில் இந்தியா சார்பில் பிரதமர் நரேந்திர மோடி உரை நிகழ்த்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக அவர் அடுத்த மாதம் அமெரிக்கா செல்ல வாய்ப்புள்ளது. இதற்கு முன்பாக, கடந்த பிப்ரவரியில் பிரதமர் மோடி அமெரிக்கா சென்றார். அப்போது, அதிபர் ட்ரம்ப் உடன் நடத்திய பேச்சுவார்த்தையில், இரு நாடுகளுக்கு இடையே பல்வேறு ஒப்பந்தங்களை முன்னெடுத்துச் செல்வது தொடர்பான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.






### பாகிஸ்தானுக்கு எதிரான தொடரைக்

# 34 ஆண்டுகளின் பின்னர் கைப்பற்றியது மேற்கிந்தியத் தீவுகள்

பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை 34 ஆண்டுகளின் பின்னர் மேற்கிந்தியத் தீவுகள் கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட தொடரின் முதலாவது போட்டியை பாகிஸ்தான் வென்றிருந்ததுடன், இரண்டாவது போட்டியை மேற்கிந்தியத் தீவுகள் வென்றிருந்த நிலையில், ட்ரினிடாட்டில் செவ்வாய்க்கிழமை (12) நடைபெற்ற மூன்றாவது போட்டியை வென்றதன் மூலமே 2-1 என்ற ரீதியில் தொடரை மேற்கிந்தியத் தீவுகள் கைப்பற்றியது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தானின் அணித்தலைவர் மொஹமட் றிஸ்வான், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடுமென அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், ஆரம்பத்திலிருந்தே குறிப்பிட்ட இடைவெளிகளில் நசீம் ஷா(2), அப்ரார் அஹ்மட்(2), சைம் அயூப், மொஹமட் நவாஸிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்தபோதும் இறுதியில் அணித்தலைவர் ஷே ஹோப்பின் ஆட்டமிழக்காத 120 (94), ஜஸ்டின் கிரேவ்ஸின் ஆட்டமிழக்காத 43 (24) மற்றும் எவின் லூயிஸின் 37 (54), றொஸ்டன் சேஸின் 36 (29) ஓட்டங்களோடு 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 294 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 295 ஓட்டங்களை வெற்றியிலக்காக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், ஆரம்பத்திலிருந்தே ஜேடன் சியல்ஸ் (6), குடகேஷ் மோட்டி(2), சேஸிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 29.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 92 ஓட்டங்களையே பெற்று 202 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஹோப்பும், தொடரின் நாயகனாக சியல்ஸும் தெரிவாகினர்.

### வட மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான

# குத்துச்சண்டையில் பிரகாசித்தது சென். பற்றிக்ஸ்



ஏ. எஸ். தில்லைநாதன்

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான குத்துச் சண்டைப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 2 தங்கம், 2 வெண்கலப் பதக்கங்களை கைப்பற்றியது.

முல்லைத்தீவு வித்தியானந்த கல்லூரியில் திங்கட்கிழமை(11) அன்று நடைபெற்ற போட்டியில் 16 வயது பிரிவின் 44 கிலோ கிராம் தொடக்கம் 46 கிலோ கிராம் வரையான எடைப் பிரிவில் ரு. சுலக்சன், 20 வயதுப் பிரிவின் 46 கிலோ கிராம் தொடக்கம் 49 கிலோ கிராம் வரையான எடைப் பிரிவில் ரா.விசாலகன் ஆகியோர் முதலிடங்களைப் பெற்று தங்கப் பதக்கங்களை வென்றனர்.

இதேபோன்று, 20 வயதுப் பிரிவின் 46 கிலோ கிராம் தொடக்கம் 49 கிலோ கிராம் வரையான எடைப் பிரிவில் உ.அநெக்ஸ் மூன்றாமிடத்தையும் 20 வயதுப் பிரிவின் 56 கிலோ கிராம் தொடக்கம் - 60 கிலோ கிராம் வரையான எடைப் பிரிவில் ஆர். றொசினோ மூன்றாமிடத்தையும் பெற்று வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.

### பரிஸ் ஸா ஜெர்மைனிலிருந்து

# வெளியேறுவதை உறுதி செய்த டொன்னருமா




பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனிலிருந்து தான் உடனடியாக வெளியேறுவதை அக்கழகத்தின் கோல் காப்பாளர் ஜல்லூயிஜி டொன்னருமா உறுதிப்படுத்தியுள்ளார்.

பரிஸ் ஸா ஜெர்மைனின் முகாமையாளர் லூயிஸ் என்றிக்கேயால் குழாமிலிருந்து நீக்கப்பட்டதையடுத்தே தான் வெளியேறுவதை 26 வயதான டொன்னருமா உறுதிப்படுத்தியுள்ளார்.

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சுப்பர் கிண்ணப் போட்டிக்கான குழாமிலிருந்து டொன்னருமாவை என்றிக்கே நீக்கியிருந்தார்.

கழகத்தில் 2021ஆம் ஆண்டு டொன்னருமா இணைந்திருந்தார்.

இன்னொரு லீக் 1 கழகமான லில்லியின் கோல் காப்பாளர் லூகாஸ் செவலியரை கடந்த வாரம் பரிஸ் ஸா ஜெர்மைன் கைச்சாத்திட்டிருந்தது.

### இரண்டாவது போட்டியில்

# அவுஸ்திரேலியாவை வீழ்த்திய தென்னாபிரிக்கா

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரில், டார்வினில் செவ்வாய்க்கிழமை(12) அன்று நடைபெற்ற இரண்டாவது போட்டியில் தென்னாபிரிக்கா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

தென்னாபிரிக்கா: 218/7 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: டெவால்ட் பிறெவிஸ் ஆ.இ 125 (56), ட்ரிஸ்டன் ஸ்டப்ஸ் 31 (22) ஓட்டங்கள். பந்துவீச்சு: பென் டுவார்ஷுஸ் 2/24 [4])

அவுஸ்திரேலியா: 165/10 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: டிம் டேவிட் 50 (24) ஓட்டங்கள். பந்துவீச்சு: கொர்பின் பொஷ் 3/20 [3], லுங்கி என்கிடி 1/19 [3.4], ககிஸோ றபாடா 1/21 [3], ஏய்டன் மார்க்ரம் 1/9 [1])

போட்டியின் நாயகன்: டெவால்ட் பிறெவிஸ்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் வியாழக்கிழமை 14, ஓகஸ்ட் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.